No. of Printed Pages : **12**

**9042**

**M**

பதிவு எண் / Register Number

# PART - III

# வரலாறு / HISTORY

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version )

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

Time Allowed : 3.00 Hours ] [Maximum Marks : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

## பகுதி - I / PART - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

[ திருப்புக / Turn over

1. காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து எந்த ஆண்டு இந்தியா திரும்பினார் ?

(அ) 1917 (ஆ) 1915 (இ) 1918 (ஈ) 1916

When did Gandhi return to India from South Africa ?

(a) 1917 (b) 1915 (c) 1918 (d) 1916

2. "Indian Unrest" என்ற புத்தகத்தின் ஆசிரியர் :

(அ) திலகர் (ஆ) லாலா லஜபதி ராய்

(இ) அன்னி பெசண்ட் (ஈ) வேலண்டைன் சிரோல்

The author of the book "Indian Unrest" was :

(a) Tilak (b) Lala Lajpat Rai

(c) Annie Besant (d) Valentine Chirol

3. **கூற்று :** வ.உ. சிதம்பரம் சுதேசி நீராவிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.

**காரணம்:** இந்தியக் கடற்கரைகளில் ஆங்கிலேயர்களின் முற்றுரிமையினை அவர் எதிர்த்தார்.

(அ) **கூற்று** சரி; **காரணம்** தவறு.

(ஆ) **கூற்று** மற்றும் **காரணம்** சரி. **காரணம்** **கூற்றை** விளக்குகிறது.

(இ) **கூற்று** தவறு; **காரணம்** சரி.

(ஈ) **கூற்று** மற்றும் **காரணம்** சரி, ஆனால் **காரணம்** **கூற்றை** விளக்கவில்லை.

**Assertion (A)** : V.O. Chidambaram launched a Swadeshi Steam Navigation Company.

**Reason (R)** : He wanted to oppose the monopoly of the British in navigation through the coast.

(a) **(A)** is correct and **(R)** is wrong.

(b) **(A)** and **(R)** are true and **(R)** is the correct explanation of **(A)**.

(c) **(A)** is wrong and **(R)** is correct.

(d) **(A)** and **(R)** are true and **(R)** is not the correct explanation of **(A)**.

4. கீழ்க்கண்டவற்றில் எது சமயத்தை இரண்டாம் நிலைக்கு தள்ளியது ?

(அ) புவியியல் கண்டுபிடிப்பு (ஆ) மறுமலர்ச்சி

(இ) வர்த்தகப் புரட்சி (ஈ) சமயச் சீர்திருத்தம்

Which one of the following had relegated religion to a subordinate place ?

(a) Geographical Discovery (b) Renaissance

(c) Commercial Revolution (d) Reformation

**5.** **கூற்று :** உலகையே கடுமையாக பாதித்தப் பொருளாதார பெருமந்தம் சோவியத் ரஷ்யாவை பாதிக்கவில்லை.

**காரணம்:** நிலம் சமூக உடைமையாக அறிவிக்கப்பட்டு ஏழை மக்களுக்குப் பிரித்து வழங்கப்பட்டது.

(அ) **கூற்று** சரி, **காரணம்** தவறு.

(ஆ) **கூற்றும் காரணமும்** சரி. **காரணம் கூற்றை** விளக்குகிறது.

(இ) **கூற்று** தவறு, **காரணம்** சரி.

(ஈ) **கூற்றும் காரணமும்** சரி, ஆனால் **காரணம் கூற்றை** விளக்கவில்லை.

**Assertion (A)** : The Great Depression which affected the entire world had made no impact on USSR.

**Reason (R)** : Land was declared as social property and distributed among poor peasants.

(a) **(A)** is correct but **(R)** is wrong.

(b) **(A)** and **(R)** are correct. **(R)** explains **(A)**.

(c) **(A)** is wrong, **(R)** is correct.

(d) **(A)** and **(R)** are correct but **(R)** does not explain **(A)**.

**6.** ''இந்திய கல்விக் குறித்த குறிப்புகளை'' எழுதியவர் யார் ?

(அ) மாக்ஸ் முல்லர் (ஆ) வில்லியம் ஜோன்ஸ்

(இ) மெக்காலே (ஈ) சார்லஸ் வில்கின்ஸ்

Who wrote the "Minute on Indian Education" ?

(a) Max Muller (b) William Jones

(c) Macaulay (d) Charles Wilkins

**7.** காங்கிரஸ் ஆட்சி முடிவுக்கு வந்த நாளினை முஸ்லீம் லீக் மீட்பு நாளாக கொண்டாடிய நாள் __________.

(அ) 23 மார்ச், 1937 (ஆ) 22 டிசம்பர், 1940

(இ) 22 டிசம்பர், 1939 (ஈ) 5 பிப்ரவரி, 1939

The Muslim League celebrated the end of Congress rule as a Day of Deliverance on :

(a) 23 March 1937 (b) 22 December 1940

(c) 22 December 1939 (d) 5 February 1939

8. அர்ஜென்டினாவை விடுதலையடையச் செய்தவர் __________.

(அ) பெர்னார்டோ ஓ ஹிக்கின்ஸ் (ஆ) சான் மார்ட்டின்

(இ) மரினா மோர்லஸ் (ஈ) டாம் பெட்ரோ

The liberator of Argentina was __________ .

(a) Bernardo O'Higgins (b) San Martin

(c) Marina Morelos (d) Dom Pedro

9. தமிழ்நாட்டில் __________ தலைமையில் உப்பு சத்தியாகிரக யாத்திரை வேதாரண்யம் நோக்கி நடந்தது.

(அ) வ.உ.சி. (ஆ) காமராஜர்

(இ) இராஜாஜி (ஈ) சத்தியமூர்த்தி

In Tamilnadu, a Salt Satyagraha march was led by __________ to Vedaranyam.

(a) V.O.C. (b) Kamaraj

(c) Rajaji (d) Satyamurti

10. பின்வரும் கூற்றுக்களைக் காண்க.

(i) 1905 இல் மேற்கொள்ளப்பட்ட வங்கப் பிரிவினை ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கைக்கு மிகச் சிறந்த உதாரணமாகும்.

(ii) 1905 இல் நடைபெற்ற கல்கத்தா மாநாட்டில் சுரேந்திரநாத் பானர்ஜி பிரிட்டிஷ் பொருட்களையும், நிறுவனங்களையும் புறக்கணிக்க அழைப்பு விடுத்தார்.

(iii) 1905 ஆகஸ்ட் 7 -ல் கல்கத்தா நகர அரங்கில் (Town Hall) நடைபெற்ற கூட்டத்தில் சுதேசி இயக்கம் குறித்த முறையான அறிவிப்பு வழங்கப்பட்டது.

மேற்கண்ட கூற்றுகளில் எது / எவை **சரியானவை** ?

(அ) (i) மற்றும் (iii) மட்டும் (ஆ) (i) மற்றும் (ii) மட்டும்

(இ) (i) மட்டும் (ஈ) மேற்கண்ட அனைத்தும்

Consider the following statements :

(i) The Partition of Bengal in 1905 was the most striking example of the British divide and rule policy.

(ii) In the Calcutta meeting 1905, Surendranath Banerjee gave a call for the boycott of British goods and institutions.

(iii) On 7 August 1905 at Town Hall meeting in Calcutta, a formal proclamation of Swadeshi Movement was made.

Which of the statements given above is/are **correct** ?

(a) (i) and (iii) only (b) (i) and (ii) only

(c) (i) only (d) All of the above

**11.** நியூ ஆம்ஸ்டர்டாமிற்கு __________ என மறுபெயர் சூட்டப்பட்டது.

(அ) சிக்காகோ (ஆ) வாஷிங்டன்

(இ) ஆம்ஸ்டர்டாம் (ஈ) நியூயார்க்

New Amsterdam was renamed as __________ .

(a) Chicago (b) Washington

(c) Amsterdam (d) New York

**12.** **சரியான** வரிசையில் அமைத்து விடையைத் தேர்வு செய்க.

(i) இந்திய தேசிய இராணுவம் தோற்றுவிக்கப்படுதல்

(ii) இராயல் இந்திய கடற்படைக் கலகம்

(iii) இந்திய தேசிய இராணுவம் மீதான விசாரணை

(iv) இராஜாஜி திட்டம்

(அ) (iii), (iv), (i), (ii) (ஆ) (ii), (i), (iii), (iv)

(இ) (iii), (iv), (ii), (i) (ஈ) (i), (iv), (iii), (ii)

Arrange the following in **correct** order and select the correct answer.

(i) Formation of Indian National Army

(ii) Royal Indian Navy Revolt

(iii) Indian National Army Trials

(iv) Rajaji formula

(a) (iii), (iv), (i), (ii) (b) (ii), (i), (iii), (iv)

(c) (iii), (iv), (ii), (i) (d) (i), (iv), (iii), (ii)

**13.** கெல்லாக்-பிரையாண்ட் ஒப்பந்தம் __________ ஆண்டில் கையெழுத்தானது.

(அ) 1929 (ஆ) 1927 (இ) 1930 (ஈ) 1928

The Kellogg-Briand Pact was signed in the year __________ .

(a) 1929 (b) 1927 (c) 1930 (d) 1928

14. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (1) | நாமசூத்ரா இயக்கம் | (i) | வடமேற்கு இந்தியா |
| (2) | ஆதிதர்ம இயக்கம் | (ii) | தென்னிந்தியா |
| (3) | சத்யசோதக் இயக்கம் | (iii) | கிழக்கிந்தியா |
| (4) | திராவிட இயக்கம் | (iv) | மேற்கு இந்தியா |

(அ) (1) - (i), (2) - (ii), (3) - (iii), (4) - (iv)

(ஆ) (1) - (iii), (2) - (i), (3) - (iv), (4) - (ii)

(இ) (1) - (iii), (2) - (iv), (3) - (i), (4) - (ii)

(ஈ) (1) - (ii), (2) - (i), (3) - (iv), (4) - (iii)

Match the following :

| | | | |
|---|---|---|---|
| (1) | The Namasudra Movement | (i) | North Western India |
| (2) | The Adidharma Movement | (ii) | South India |
| (3) | The Satyashodhak Movement | (iii) | Eastern India |
| (4) | The Dravidian Movement | (iv) | Western India |

(a) (1) - (i), (2) - (ii), (3) - (iii), (4) - (iv)

(b) (1) - (iii), (2) - (i), (3) - (iv), (4) - (ii)

(c) (1) - (iii), (2) - (iv), (3) - (i), (4) - (ii)

(d) (1) - (ii), (2) - (i), (3) - (iv), (4) - (iii)

15. ''பனிப்போர்'' எனும் சொல்லை உருவாக்கியவர் __________.

(அ) ஜார்ஜ் கென்னன் (ஆ) பெர்னார்ட் பரூச்

(இ) சர்ச்சில் (ஈ) ஜார்ஜ் ஆர்வெல்

The term "Cold War" was coined by __________.

(a) George Kennan (b) Bernard Baruch

(c) Churchill (d) George Orwell

**16.** பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (1) | ஜேவிபி குழு | (i) | 1928 |
| (2) | சர் சிரில் ராட்கிளிஃப் | (ii) | மாநில மறுசீரமைப்பு ஆணையம் |
| (3) | பசல் அலி | (iii) | 1948 |
| (4) | நேரு குழு அறிக்கை | (iv) | எல்லை வரையறை ஆணையம் |

(அ) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i)

(ஆ) (1) - (i), (2) - (ii), (3) - (iii), (4) - (iv)

(இ) (1) - (iv), (2) - (ii), (3) - (iii), (4) - (i)

(ஈ) (1) - (iii), (2) - (iv), (3) - (ii), (4) - (i)

Match the following :

| | | | |
|---|---|---|---|
| (1) | JVP Committee | (i) | 1928 |
| (2) | Sir Cyril Radcliffe | (ii) | State Reorganisation Commission |
| (3) | Fazl Ali | (iii) | 1948 |
| (4) | Nehru Committee Report | (iv) | Boundary Commission |

(a) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i)

(b) (1) - (i), (2) - (ii), (3) - (iii), (4) - (iv)

(c) (1) - (iv), (2) - (ii), (3) - (iii), (4) - (i)

(d) (1) - (iii), (2) - (iv), (3) - (ii), (4) - (i)

**17.** ஜெர்மன் தேசத்திற்கு தொடர் சொற்பொழிவுகளை வழங்கியவர் __________ ஆவார்.

(அ) J.G. ஃபிக்ட் (ஆ) ஜோஹன் வான் ஹெர்டர்

(இ) ஆட்டோ வான் பிஸ்மார்க் (ஈ) பிரைட்ரிக் ஷெலிகெல்

__________ delivered a series of addresses to the German Nation.

(a) J.G. Fichte (b) Johann von Herder

(c) Otto von Bismarck (d) Friedrich Schliegel

**18.** தனிநபர் சத்தியாகிரகம் எப்போது தொடங்கியது ?

(அ) அக்டோபர் 17, 1940 (ஆ) மார்ச் 23, 1940

(இ) ஆகஸ்ட் 9, 1942 (ஈ) ஆகஸ்ட் 8, 1940

When did Individual Satyagraha begin ?

(a) 17 October, 1940 (b) March 23, 1940

(c) August 9, 1942 (d) August 8, 1940

**19.** இந்திய அரசியலமைப்பில் முதலாவது திருத்தம் எப்போது மேற்கொள்ளப்பட்டது ?

(அ) 1976 (ஆ) 1951 (இ) 1978 (ஈ) 1952

When was the first amendment to the Constitution of India made ?

(a) 1976 (b) 1951 (c) 1978 (d) 1952

**20.** 64 நாட்கள் உண்ணாவிரதத்திற்கு பிறகு சிறையில் உயிரிழந்தவர் யார் ?

(அ) ஜதீந்திர நாத் தாஸ் (ஆ) புலின் தாஸ்

(இ) பிரித்தி வதேதார் (ஈ) சச்சின் சன்யால்

Who died in jail after 64 days of hunger strike ?

(a) Jatindra Nath Das (b) Pulin Das

(c) Preethi Waddadar (d) Sachin Sanyal

**பகுதி - II / PART - II**

**குறிப்பு :** **ஏதேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **30 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x2=14**

**Note :** Answer **any seven** questions. Question No. **30** is **compulsory**.

**21.** அவுரி கலகம் குறித்து குறிப்பு வரைக.

Write a note on Indigo revolt.

**22.** தேசிய இயக்கத்தை ஒடுக்க காலனிய அரசு மேற்கொண்ட அடக்குமுறைகள் யாவை ?

What were the repressive measures adopted by the colonial government to crush the nationalist movements ?

**23.** இந்தியப் பணியாளர் சங்கம் ஏன் தோற்றுவிக்கப்பட்டது ?

Why was Servants of India Society founded ?

**24.** சிம்லா மாநாட்டின் பேச்சுவார்த்தைகள் ஏன் முறிந்தன ?

Why did the talks at Simla Conference break down ?

**25.** மீரட் சதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட குற்றவாளிகளுக்கு ஆதரவாக வாதாடிய வழக்கறிஞரை அடையாளப்படுத்துக.

Identify the person who appeared and defended the accused in the Meerut Conspiracy Case.

**26.** சமதர்ம சமூக அமைப்பு என்பதைப் பற்றி நீவிர் அறிந்ததென்ன ?
What do you understand by the Socialistic Pattern of Society ?

**27.** பிளாரன்ஸின் மெடிசி குடும்பம் பற்றி எழுதுக.
Write about the Medici family in Florence.

**28.** நிகிலிசம் என்றால் என்ன ?
What is meant by Nihilism ?

**29.** ரோம்-பெர்லின் அச்சின் உருவாக்கத்திற்குப் பின்புலமாக அமையப்பெற்றது எது ?
What was the background for the formation of Rome-Berlin Axis ?

**30.** ஐ.நா.சபையினை பற்றி இரண்டு குறிப்புகள் எழுதுக.
Write two points about UNO.

## பகுதி - III / PART - III

குறிப்பு : **ஏதேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் **40 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x3=21**

**Note :** Answer **any seven** questions. Question No. **40** is **compulsory**.

**31.** பிரிட்டிஷ் இந்தியாவில் ஒப்பந்தக் கூலி தொழிலாளர் முறை எவ்வழியில் ஏற்படுத்தப்பட்டது என்பதை விவரிக்கவும்.
Describe about the way in which indentured labour was organized in British India.

**32.** இந்திய சுதந்திரப் போராட்டத்தின் ஒரு அத்தியாயமாக கதார் இயக்கம் கருதப்படுவது ஏன் ?
Why is Ghadar Movement considered an important episode in India's freedom struggle ?

**33.** ஜாலியன்வாலா பாக் படுகொலை பற்றி குறிப்பு எழுதுக.
Write a note on the Jallianwala Bagh Massacre.

**34.** டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் (TISCO) பற்றி சிறு குறிப்பு எழுதுக.
Write a short note on TISCO.

35. சர் ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் அவர்களின் முன்மொழிவுகளை விவாதிக்கவும்.
Discuss the proposals of Sir Stafford Cripps.

36. பஞ்சசீலக் கொள்கையின் ஐந்து கோட்பாடுகளை விளக்குக.
Explain the five principles of Panch Sheel.

37. 1783 இல் கையெழுத்திடப்பட்ட பாரிஸ் உடன்படிக்கையின் முக்கியச் சரத்துக்களை விவாதிக்கவும்.
Discuss the important provisions of the Treaty of Paris signed in 1783.

38. அகழிப்போர் எவ்வாறு நடத்தப்பட்டது ?
How was Trench Warfare fought ?

39. சீன தேசிய அரசியலில் கோமின்டாங் கட்சியின் பங்கை விவாதத்திற்கு உட்படுத்துக.
Discuss the role of Kuomintang Party in China's nationalist politics.

40. சுப்ரமணிய பாரதி பற்றி சிறு குறிப்புத் தருக.
Give a short notes about Subramania Bharathi.

## பகுதி - IV / PART - IV

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7x5=35**

**Note :** Answer **all** the questions :

41. (அ) இந்திய தேசிய இயக்கத்தில் வ.உ. சிதம்பரத்தின் பங்கினைப் பற்றி எழுதுக.

**அல்லது**

(ஆ) இந்தியாவில் தேசிய விழிப்புணர்வுக்குப் பிரிட்டிஷாரின் அடக்குமுறை மற்றும் இனவெறிக் கொள்கைகள், எந்த அளவிற்குக் காரணமாக இருந்தன ?

(a) Write about the role played by V.O. Chidambaram in Indian National Movement.

**OR**

(b) To what extent the repressive and racist policy measures of the British were responsible for the national awakening in India.

42. (அ) லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்துக.

**அல்லது**

(ஆ) ஒத்துழையாமை இயக்கத்தை நடைமுறைப்படுத்தும் சூழலையும் அதன் விளைவுகளையும் விவரிக்கவும்.

(a) Highlight the important provisions of Lucknow Pact.

**OR**

(b) Describe the context of launching of the Non-Cooperation Movement and its outcome.

**43.** (அ) இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகள் யாவை ? அணிசேரா இயக்கத்தில் ஆப்பிரிக்க ஆசிய நாடுகளை இணைத்ததில் பிரதமர் நேரு அவர்களின் பங்கினை விளக்குக.

**அல்லது**

(ஆ) இராஜாஜி திட்டம் பற்றி ஒரு பத்தி எழுதுக.

(a) What were the basic principles of India's foreign policy ? What role did Prime Minister Nehru play in organizing the Afro-Asian countries into a Non-Aligned Movement ?

**OR**

(b) Write a paragraph about the Rajaji Formula.

**44.** (அ) முதல் உலகப்போரின் காரணங்களையும், விளைவுகளையும் கணக்கிடுக.

**அல்லது**

(ஆ) இந்திய விடுதலைக்குப் பின் ஏற்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் வளர்ச்சி குறித்து ஆய்க.

(a) Enumerate the causes and the consequences of the First World War.

**OR**

(b) Examine the development of institutions of Scientific research and technology after India's Independence.

**45.** (அ) முதல் இரண்டு ஐந்தாண்டு திட்டங்களின் சாதனைகளை மதிப்பிடுக.

**அல்லது**

(ஆ) இரண்டாம் உலகப்போரின் விதைகளை வெர்செய்ல்ஸ் ஒப்பந்தமே தூவியது என்பதனை தகுந்த காரணத்தோடு விளக்குக.

(a) Assess the achievements of the first two Five Year Plan.

**OR**

(b) The seeds for the Second World War were sowed in the Treaty of Versailles. Explain with reasons.

46. (அ) இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடுகள் நடைபெற்ற கீழ்கண்ட இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.

(i) சூரத் (ii) கான்பூர் (iii) மீரட் (iv) நாக்பூர் (v) சென்னை

**அல்லது**

(ஆ) அமெரிக்க விடுதலைப் போருக்கான காரணங்கள், அதன் போக்கு, விளைவுகள் குறித்து விவாதிக்கவும்.

(a) Mark the following places where Indian National Congress sessions took place on the outline map of India.

(i) Surat (ii) Kanpur (iii) Meerut (iv) Nagpur (v) Madras

**OR**

(b) Discuss the causes, course and results of the American War of Independence.

47. (அ) 1900 முதல் 1930 வரையிலான இந்திய தேசிய இயக்கத்தின் ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோடு வரைந்து காட்டுக.

**அல்லது**

(ஆ) பத்தொன்பதாம் நூற்றாண்டின் முக்கியத்துவம் பெற்ற கூட்டு சிந்தனையாளர்களை அடையாளப்படுத்தி அவர்கள் சோஷலிச சிந்தனையை செழுமையாக்க ஆற்றிய பங்கைக் கூறுக.

(a) Draw a time line from 1900-1930 and mark any five important events of Indian National Movement.

**OR**

(b) Identify the important collectivist thinkers of nineteenth century and highlight their contributions to Socialism.

- o O o -